தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கடலோர தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

தமிழகத்தின் கடலோர பகுதிகளில் ஆங்காங்கே சனிக்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்கிழக்கு வங்கக் கடலில் அந்தமான் தீவுகளுக்கு அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இது சனிக்கிழமையன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால் ஓரிரு நாள்களில் தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வானிலை முன்னறிவிப்பு: கடலோர தமிழகத்தின் சில இடங்களில் சனிக்கிழமை மழை பெய்யும். உள்மாவட்டங்களில் வறண்ட வானிலையே நிலவும். என தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் கடலோர பகுதிகளில் ஆங்காங்கே சனிக்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### ஏற்காட்டில் மலர்க் கண்காட்சி ஆட்சியர் தொடங்கிவைத்தார்

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி, கலை விழாவை மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்தார். ஏற்காட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக டிசம்பர் மாதத்தில் இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சியையொட்டி, வெள்ளிக்கிழமை குதிரைகள் அணிவகுப்பு, மேளம், கரகாட்டம், தப்பாட்டம், வாணவேடிக்கை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் படகுத் துறையில் இருந்து ஊர்வலம் தொடங்கி, அண்ணா பூங்காவைச் சென்றடைந்தது. இதைத் தொடர்ந்து, மலர்க் கண்காட்சியை ஆட்சியர் க.மகரபூஷணம் தொடக்கி

வைத்துப் பேசியது: உதகை, கொடைக்கானல் ஆகிய சுற்றுலாத் தலங்களில் இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி நடத்தப்படுகிறது. அதேபோல, ஏற்காட்டிலும் 3-ஆவது ஆண்டாக இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி நடத்தப்படுகிறது. இந்தக் கண்காட்சியில் 45 வகையான மலர்களைக் கொண்ட 5 ஆயிரம் மலர்த் தொட்டிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஏற்காட்டை உதகையைப் போன்று மாற்றுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ன்றன. சுற்றுலாப் பயணிகளைக் கவர இதுபோன்ற மலர்க் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இந்தக் கண்காட்சி 26-ஆம் தேதி தொடங்கி, 28-ஆம் தேதி வரை மூன்று நாள்கள் நடைபெறுகின்றது. சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் கண்டு களிக்கலாம் என்றார். இந்த நிகழ்ச்சியில், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆர்.சக்திவேல், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.செல்வராஜ், வருவாய்க் கோட்டாட்சியர் லலிதாவதி, ஏற்காடு ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் அண்ணாதுரை, துணைத் தலைவர் சுரேஷ்குமார், ஏற்காடு ஊராட்சி மன்றத் தலைவர் முரளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுற்றுலாப் பயணிகள் வருகை

இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சியைக் காணுவதற்காக வெளியூர்களிலிருந்தும், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இவர்கள், ஏற்காட்டில் உள்ள லேடீஸ் சீட், ஜென்ட்ஸ் சீட், பக்கோடா முனை, சேர்வராயன் கோயில், படகுத் துறை உள்ளிட்ட சுற்றுலாப் பகுதிகளை குடும்பத்துடன் சென்று பார்வையிட்டு மகிழ்ந்தனர். மலர்க் கண்காட்சியில் 10 அடி உயரம், 15 அடி நீளத்தில் அஸ்பராகஸ் உள்ளிட்ட பல்வேறு மலர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள யானை, 8 அடி உயரம், 12 அடி நீளத்தில் 15 ஆயிரம் ரோஜா மலர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஏற்காட்டில் பிரசித்தி பெற்ற காட்டெருமை உருவம் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை கவர்ந்தன.

## அதிகரிக்கிறது மேட்டூர் அணையின் நீர்மட்டம்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 96.57 அடியாக இருந்தது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது. இதையடுத்து, வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.57 அடியாக இருந்து. அணைக்கு நொடிக்கு 2,465 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு நொடிக்கு 1,400 கன அடி வீதம் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 60.48 டி.எம்.சி.யாக இருந்தது.

## அரியலூர் மாவட்டத்தில் இன்று விலையில்லா வெள்ளாடுகளுக்கான மருத்துவ முகாம்

அரியலூர் மாவட்டத்தில் வழங்கப்பட்ட விலையில்லா வெள்ளாடுகளுக்கான குடற்புழு நீக்க முகாம் சனிக்கிழமை(டிச.27) நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழக அரசின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளின் எடையினை அதிகரிக்கவும், பால் உற்பத்தித் திறனை பெருக்கவும் அரியலூர் மாவட்டத்தில் சனிக்கிழமை கறவைப்பசுக்களுக்கு இனப்பெருக்க முகாம் மற்றும் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது. விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகள் பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம் என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## வேளாண் கடன் ரூ.1,640 கோடி வழங்கல்: வங்கியாளர் கூட்டத்தில் தகவல்

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில், நடப்பு செப்., மாதம் வரை, வேளாண் கடன், 1,640கோடி வழங்கப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்ட வங்கியாளர்கள் கூட்டம், கலெக்டர் பிரபாகரன் தலைமையில் நடந்தது. கடந்த, செப்டம்பர் வரை, பண்ணைசார் கடன், 1,594 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1,640 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது, 102 சதவீதமாகும். பண்ணை சாராக கடன், 889 கோடி வழங்க இலக்கு நிர்ணயித்து, 906 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இது, 101 சதவீதமாகும். இதர முன்னுரிமைக்கடன், 566 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து, 595 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.இம்மூன்று பிரிவிலும், 3,050 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து, 3,141 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.கடந்தாண்டு செப்டம்பர் மாதம், 11,035 கோடியாக இருந்த டெபாசிட் தொகை, 11,139 கோடியாகவும், 14,073 கோடியாக இருந்த கடன் பாக்கி, 14,014 கோடியாகவும் உள்ளது. கடந்தாண்டு, வேளாண் கடன் 4,588 கோடி வழங்கப்பட்டது. நடப்பாண்டில், இதுவரை, 4,657 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கல்விக்கடன், கடந்தாண்டில், 684 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், செப்டம்பர் வரை, 650 கோடி கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது, என தெரிவிக்கப்பட்டது.

## பொங்கலுக்கு தயாராகும் செங்கரும்பு

தாடிக்கொம்பு:தைப்பொங்கலுக்காக தித்திக்கும் செங்கரும்பு அறுவடைக்கு தயாராக உள்ளது. பொங்கலுக்கு இரண்டு வாரங்களே இருப்பதால் கரும்பு

பயிர் செய்துள்ள விவசாயிகள் அறுவடைக்கு தயாராகி வருகின்றனர். தாடிக்கொம்பு பகுதியில் உள்ள விவசாயிகள் பொங்கலை முன்னிட்டு செங்கரும்பு சாகுபடி செய்திருந்தனர். தற்போது அறுவடைக்கு தயாராகியுள்ளது.கரும்பிற்கு சீரான தண்ணீர் பாய்ச்சி பக்குவமாக வளர்க்க வேண்டும். பூச்சி தாக்குதல், அடை மழை போன்ற இன்னல்களை தாண்டி மிகுந்த சிரமத்திற்கிடையே கரும்பு வளர்க்கப்படுகிறது. தாடிக்கொம்பு அருகில் உள்ள காப்பிளியபட்டி, மறவபட்டி, செட்டிநாயக்கன்பட்டி, சென்னமநாயக்கன்பட்டி விவசாயிகள் செங்கரும்பு பயிரிட்டுள்ளனர். அதிக அளவில் மழை பெய்தால் வயல்களில் தண்ணீர் தேங்கி, வேர் அழுகி பாதிப்படைந்து விடும். இந்த ஆண்டு மழை அளவாக பெய்ததால் பாதிப்பு ஏற்படவில்லை. முதல்தரமாக இருப்பதால் இந்த ஆண்டு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

## <u>மழையால் தென்னை விவசாயிகள்... மகிழ்ச்சி:தேங்காய் விலை குறைய வாய்ப்பு</u>

கீழக்கரை:ராமநாதபுரம் மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த தொடர் மழையால் தென்னந் தோப்புகளில் ஈரப்பதம் நிலவுகிறது. இதனால் இந்த ஆண்டு அதிகளவில் தேங்காய் விளைச்சல் இருக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையோர பகுதிகளான கீழக்கரை, காஞ்சிரங்குடி, திருப்புல்லாணி, சேதுக் கரை, முத்துப்பேட்டை, பெரிய பட்டினம், வண்ணாங்குண்டு, தினைக் குளம் உள்ளிட்ட பகுதிகளில் 450 ஏக்கர் பரப்பளவில் தென்னந்தோப்புகள் உள்ளன. ஒரு ஏக்கருக்கு 80 மரங்கள் வீதம் சுமார் 50 ஆயிரம் தென்னை மரங்கள் விளைச்சல் தரும் நிலையில் உள்ளன. இப்பகுதிகளில் தென்னை மரங்களுக்கு இயற்கை உரங்களான கொளுஞ்சி, ஆட்டுக்கழிவு, பஞ்சகவ்யம், பனை ஓலை, மண்புழு உரம் ஆகியவற்றையே தோப்பு உரிமையாளர்கள் அதிகம் பயன்படுத்துவதால், தேங்காய்களில் பருப்பு பெரியதாக இருக்கும். மேலும், 200 ஆண்டுகளுக்கு

முன்பு இலங்கையில் இருந்து வரவழைக்கப் பட்டு, கீழக்கரை பகுதியில் அதிகம் விளைவிக்கப்படும் யாழ்ப்பாணம் தேங்காய்கள் மிகப்பெரியதாகவும், அதிக எண்ணை சத்துடனும், சமையலுக்கு ருசியாகவும் இருப்பதால், வெளி மாவட்டங்களுக்கு அவை பெருமளவில் லாரிகளில் அனுப்பப்படுகிறது. தேங்காய் வியாபாரி, கீழக்கரை திருச்செல்வம் கூறுகையில்,"இந்தப் பகுதியில் தற்போது பெய்த பருவமழையால் தென்னந்தோப்புகளில் ஈரப்பதம் உள்ளது. இதனால் இந்த வருடம் தேங்காய் விளைச்சல் நன்கு இருக்கும். இன்னும் 4 மாதங்கள் கழித்து தேங்காய் வரத்து அதிகளவு இருக்கும் என்பதால், விலை சற்று குறையும். தற்போது கிலோ ரூ.20 வீதம் காங்கேயம், வெள்ளக் கோயில், விருதுநகர், மதுரை, பரமக்குடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். அதிக விளைச்சல் ஏற்படும்போது விலை, மேலும் குறைய வாய்ப்புள்ளது, என்றார்.

## ஏழு வகை பழங்களை தரும்ஒட்டு ரக மா கன்று உற்பத்தி

விருதுநகர்; ஸ்ரீவி., பூவாணி அரசு தோட்டகலைப்பண்ணையில் ஒரே மாமரத்தில் ஏழு வகையான பழங்களைத்தரும் ஒட்டுரக கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.அப்பண்ணை அலுவலர் சுந்தர்ராஜன் கூறியதாவது: மா மரக்கன்றுகள் நட்ட முதலாண்டில் பூக்கத்துவங்கி இரண்டாம் ஆண்டில் காய்க்கத்துவங்கும். இப் பண்ணையில் பஞ்சவர்ண மா கன்று கடந்தாண்டு நடப்பட்டது. அதன் கிளைகளில் ஹிமாயுன், பங்கனப்பள்ளி, பஞ்சவர்ணம், நீலம், மல்லிகை, காதிர், அப்போன்ஸா ஆகிய ஏழு மா மரக்கன்றுகள் ஒட்டு சேர்க்கப்பட்டுள்ளன. இம்மரம் 2016 முதல் காய்க்கத் துவங்கும். மார்ச்சில் துவங்கி ஆகஸ்ட் இறுதிவரை ரகவாரியாக பழங்கள் கிடைக்கும். கன்னியாகுமரியில் இதுபோன்ற மாமரம் உள்ளது. இதுபோல 900 ரகங்களையும் ஒரே மா மரத்தில் ஒட்டு சேர்த்து விதவிதமாக பழங்களை பெறமுடியும்.இரு ரகங்களை ஒட்டு சேர்த்த மா கன்று ரூ.75 ரூபாய். கூடுதலாக சேர்க்கப்படும் ஒவ்வொரு ரக ஒட்டு சேர்க்கைக்கும் ரூ.50 முதல் ரூ.100 வரை வசூலிக்கப்படும். தேவைப்படுவோர் 97505 49687 ல் தொடர்பு கொள்ளலாம்,

என்றார். மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் சுப்பையா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) செல்வம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் உடனிருந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**திருந்திய நெல் சாகுபடியில் மகசூல் அதிகரிக்க வழிமுறைகள்**

ஸ்ரீமுஷ்ணம், : ஸ்ரீமுஷ் ணம் அருகே மேல்புளியங்குடியில், விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்ட அரிசி உணவு உற்பத்தி பெருக்க வயல்வெளி நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட வேளாண் உற்பத்தி குழு உறுப்பினர் செல்வராஜ் தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குநர் கனகசபை முன்னிலை வகித்தார். கடலூர் வேளாண் இணை இயக்குநர் ஹரிதாஸ் கலந்து கொண்டு, திருந்திய நெல் சாகுபடி குறித்து 2001ம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு தெரிவித்து வருவதாகவும், நல்ல மகசூல் கிடைத்து வருவதாகவும் கூறினார்.கூடுதல் மகசூல் பெற மேலாக நடவு, இலகு இயந்திர நடவு, விதை உருளை கருவி நடவு ஆகிய முறைகளில் நடவு செய்திடுமாறும், 15 நாள் வயதுடைய இளம் நாற்றினை நடவு செய்திடவும், இதனால் விரைவாக வேர் பிடித்து அதிகமான தூர்கள் பிடிக்கும். நடவு செய்த 15 நாட்களில் வயல்களில் குச்சிகள் நட வேண்டும் இதனால் பூச்சி தாக்குதல் குறைந்து மகசூல் அதிகரிக்கும். ஆழமான நடவு முறையில் வேர் பிடிப்பதில் காலதாமதம், நீர் தேங்கினால் நாற்றுகள் அழுகிவிடும். குறைவான தூர் வெடிப்பு, வளம் குன்றிய கதிர்கள், மகசூல் இழப்பு ஆகியவை ஏற்படும். நேரடி நெல் விதைப்பு முறையில் 15 முதல் 20 நாட்களில் பயிர்களை கலைத்து நடவு செய்திட வேண்டும் என பல்வேறு தொழில் நுட்ப கருத்துகளை விவசாயிகளுக்கு தெரிவித்தார். வேளாண் அலுவலர் ரமேஷ், வேளாண் உதவி அலுவலர் திருமுருகன், வெற்றி செல்வன்,

ஆத்மா தொழில் நுட்ப மேலாளர்கள் கதிர் காமன், பாலமுருகன், ஸ்ரீமுஷ்ணம் இந்தியன் வங்கி ஊரக வளர்ச்சி அலுவலர் அருண்குமார் மற்றும் மேல் புளியங்குடி, எம்.பி. அக்ரகாரம், குணமங்கலம், கொக்கரசன்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## ரூ.48.14 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அனுப்பர்பாளையம், ; அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெறுகிறது. நேற்று நடைபெறற ஏலத்திற்கு 2 ஆயிரத்து 800 மூட்டைகளில் பருத்தி கொண்டு வரப்பட்டது. ஏலத்தில், கோபி, நம்பியூர், கிணத்துக்கடவு, குன்னத்தூர், செங்கப்பள்ளி, தர்மபுரி, கொள்ளேகால், நொக்கனூர், ஆத்தூர், ஆகிய பகுதிகளிலிருந்து 414 விவசாயிகளும், அவிநாசி, திருப்பூர், பல்லடம், கோ வை, ஈரோடு பகுதியிலி ருந்து 19 வியாபாரிகளும் பங்கேற்றனர். மொத்தம் ரூ. 48.14 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சீசன் மீண்டும் துவங்கியதால், சென்ற வாரத்தைவிட பருத்தி வரத்து அதிகரித்திருந்தது. மேலும் சென்ற வாரத்தைவிட டி.சி.எச். ரகப்பருத்தி குவின்டாலுக்கு ரூ.100 வரை விலை அதிகரித்தது. இதில், டி.சி.எச். ரகப்பருத்தி குவின்டால் ஒன்றுக்கு ரூ.4800 முதல் 5105 வரையிலும், ஆர்.சி. எச் ரகப்பருத்தி குவின்டால் ஒன்றுக்கு ரூ. 3800 முதல் ரூ. 4450 வரையிலும், மட்ட ரகப்பருத்தி ரூ. 2000 முதல் ரூ. 2600 வரையிலும் ஏலம் போனது. எல்.ஆர்.ஏ. ரகப்பருத்தி வரத்து இல்லை.

## பனிப்பொழிவால் வரத்து குறைவு மல்லி கிலோ ரூ.1,000

மதுரை, : பனிப்பொழிவால் வரத்து குறைந்து மல்லி விலை மீண்டும் உயர்ந்தது. கிலோ ரூ.1000க்கு நேற்று விற்பனையானது. மதுரை பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தலைவர் மனோகரன் கூறுகையில், தற்போது பனி பெய்து வருவதால் மல்லி வரத்து குறைந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ரூ.500 முதல் ரூ.600 வரை விற்று வந்த மல்லி, கடந்த 3 நாட்களாக ரூ.1,000த்திற்கு

விற்கிறது. மேலும் மார்கழி மாதம் என்பதால் பெண்கள் கோயிலுக்கு செல்வதாலும், ஐயப்பன் சீசன் என்பதாலும் பூக்கள் விலை மீண்டும் உயர்ந்துள்ளது' என்றார். பூக்களின் விலை(கிலோ) நிலவரம். (பழைய விலை அடைப்புக்குறிக்குள்):

மல்லி-ரூ.1000

சம்மங்கி-ரூ.60

ரோஜா-ரூ.80

அரளி-ரூ.70

பிச்சிப்பூ-ரூ.500

முல்லைப்பூ-ரூ.800

செண்டுபூ-ரூ.30

கோழிக்கொண்டை-ரூ.40

கனகாம்பரம்-ரூ.600

மரிக்கொழுந்து-ரூ.40

மருள்(கட்டு)-ரூ.30

துளசி-ரூ.10

பட்டன்ரோஸ்-ரூ.100

தாமரை(ஒருபூ)-ரூ.15

மெட்ராஸ்மல்லி-ரூ.500

செவ்வந்தி - ரூ.40.

## <u>நத்தம் பகுதியில் கால்நடை பராமரிப்பு கூடுதல் இயக்குனர் ஆய்வு</u>

நத்தம், : கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மாநில கோழி வளர்ப்பு திட்டத்தில் கறிக்கோழிகள் வளர்ப்பு மற்றும் நாட்டுக் கோழிகள் வளர்ப்பு ஆகிய திட்டங்கள் தமிழகம் முழுவ தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கடந்த 3 ஆண்டுக ளாக விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். நாட்டுக்கோழி வளர்ப்பு திட்ட த்தில் 250 கோழிகள் வளர் க்க 25 சதவீதம் மானியம்

வழங்கப்படுகிறது. இத்திட்ட த்தில் சேரும் ஒவ்வொரு பயனாளிக் கும் அவர்களது மா னியத்தொகை சுமார் ரூ. 29,650 ஐ அவர்கள் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும். இதையொட்டி நத்தம் வட்டாரத்தில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளின் கோழிப் பண்ணைகளை சென்னை கால்நடை பராமரிப்புத்துறை கூடுதல் இயக்கு நர் மகேந்திரன் ஆய்வு செய்தார். பரளி புதூர், லிங்கவாடி, ஒடுகம்பட்டி, கோட்டை யூர்,சின்னையம்பட்டி ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்தார். ஆய்வின் போது பழநி கோட்ட கால்நடை துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், திண்டுக்கல் உதவி இயக்குநர் ராமசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பரமத்தி வேலூர் ஏல மார்க்கெட்டில் வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



பரமத்தி வேலூர் தினசரி ஏல மார்க்கெட்டில் வாழைத்தார்கள் விலை உயர்வு அடைந்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.
வாழை

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் பரமத்தி வேலூர், பாண்டமங்கலம், நன்செய் இடையார், பொத்தனூர், அணிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், ஓலப்பாளையம், எல்லைமேடு உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டு உள்ளது. இங்கு விளையும் வாழைத்தார்கள் சேலம், திண்டுக்கல், கோவை, ஊட்டி, மதுரை, பழனி, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் தினந்தோறும் அனுப்பப்பட்டு

வருகிறது. மேலும் பரமத்தி வேலூரில் உள்ள மார்க்கெட்டிலும் வாழைத்தார் ஏலம் விடப்பட்டு வருகிறது. விலை உயர்வு சென்ற வாரம் இந்த மார்க்கெட்டில் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.150-க்கும், கற்பூரவள்ளி ரூ.200-க்கும், ரஸ்தாலி ரூ.200-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ200-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7 வீதம் ஏலம் போனது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.250-க்கும், கற்பூரவள்ளி ரூ.250-க்கும், ரஸ்தாலி ரூ.225-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.300-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7 வீதம் ஏலம் போனது. விவசாயிகள் மகிழ்ச்சி பரமத்தி வேலூர் வாழைத்தார் மார்க்கெட்டுக்கு வழக்கமாக வாரந்தோறும் ஆயிரம் முதல் சுமார் 1500 வாழைத்தார்கள் ஏலத்திற்கு வரும். ஆனால் இந்த வாரம் வெறும் 700 வாழைத்தார்களே ஏலத்திற்கு வந்து இருந்தது. வரத்து குறைவு காரணமாக வாழைத்தார்களின் விலை சற்று அதிகரித்து உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். பொங்கல் பண்டிகை வரை வாழைத்தார்களின் விலை உயர்ந்தே இருக்க வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## எண்ணெய்வித்து பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்

புதுக்கோட்டை, எண்ணெய்வித்து பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்று கலெக்டர் கூறினார்.

விவசாயிகளுக்கு பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் எண்ணெய்வித்து பயிர்கள் மற்றும் எண்ணெய்ப்பனை தேசிய இயக்கத்தின் சார்பாக விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு மாவட்ட கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கி பயிற்சியை தொடங்கி வைத்து பேசினார். அவர் பேசியதாவது:–

நவீன தொழில்நுட்பங்களை...

எண்ணெய்வித்து பயிர்களில் விவசாயிகள் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பங்களைத் தவறாது கடைபிடிக்க வேண்டும். அரசின் வேளாண் திட்டங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இதுபோன்ற பயிற்சியில் கலந்து கொண்டு தங்களுக்கு தெரிந்து கொண்ட தொழில்நுட்பங்களை பிற விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

<u>தொழில்நுட்ப கையேடுகள்</u>

அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் உழவர் பயிற்சி நிலையம் மூலம் தயார் செய்யப்பட்ட எண்ணெய்வித்து தொழில்நுட்ப சாகுபடிக் கையேட்டினை கலெக்டர் வெளியிட அதனை குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி முதல்வர் பெற்றுக்கொண்டார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டன. பயிற்சிக்கு முன்னிலை வகித்த வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் பேசுகையில், நிலக்கடலைக்கு தேவையான ஜிப்சம் மானிய விலையில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளதெனவும், இதனை விவசாயிகள் பயன்படுத்தி நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெறுமாறும் கேட்டுக் கொண்டார். வேளாண்மை துணை இயக்குநர் சாந்தி, உழவர் பயிற்சி நிலையம் மூலம் நடத்தப்படும் பயிற்சிகளை தங்கள் பகுதியைச் சேர்ந்த பிற விவசாயிகளுக்கும் வழங்கிட கேட்டுக்கொண்டார். குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி முதல்வர் கஜேந்திரன் பேசுகையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில்நுட்பங்களை தங்கள் வயல்களில் செயல்படுத்தி பயன்பெற கேட்டுக்கொண்டார்.

<u>நிலக்கடலையில்விதைநேர்த்தி</u>

ஸ்டாமின் இயக்குநர் (பொறுப்பு) வெள்ளைச்சாமி, மத்திய அரசுத் திட்ட வேளாண்மைத் துணை இயக்குநர் சதானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். எண்ணெய்வித்து பயிற்சியில் நிலக்கடலையில் விதைநேர்த்தி, பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, உர நிர்வாகம், களை நிர்வாகம்

குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எஸ்.ராஜசேகரன் பயிற்சி வழங்கினார். வம்பன் வேளாண் அறிவியல் நிலைய நோயியல் உதவிப் பேராசிரியர் மதியழகன், நிலக்கடலையை தாக்கும் பூச்சி நோய் குறித்து விளக்கி கூறினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயிர் எண்ணிக்கை பராமரிப்பு மற்றம் விதைநேர்த்தி குறித்த தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. முடிவில் வேளாண்மை அலுவலர்(மத்திய திட்டம்) ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

## <u>ஏற்காட்டில் கோலாகலமாக தொடங்கியது 2 லட்சம் வண்ண மலர்களுடன் கண்காட்சி-கலைவிழா சுற்றுலா பயணிகள் கண்டுரசித்தனர்</u>



ஏற்காட்டில் 2 லட்சம் வண்ண மலர்களுடன் கோலாகலமாக நேற்று இரண்டாம் பருவ மலர்கண்காட்சி மற்றும் கலைவிழா தொடங்கியது. இதையொட்டி பூத்து குலுங்கிய பல வண்ண மலர்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். இரண்டாம்பருவமலர்கண்காட்சி

'ஏழைகளின் ஊட்டி' என்றழைக்கப்படும் ஏற்காட்டில் கடந்த மே மாதம் கடைசியில் 39-வது கோடை விழாவையொட்டி மலர்கண்காட்சி நடத்தப்பட்டது. இந்த நிலையில், ஏற்காட்டில் இந்த மாதம் (டிசம்பர்) சீசன் களை கட்டியதை தொடர்ந்து இரண்டாம் பருவ மலர்கண்காட்சி மற்றும் கலைவிழாவை நடத்த மாவட்ட நிர்வாகம் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி ஏற்காட்டில் இரண்டாம் பருவ மலர்கண்காட்சி மற்றும் கலைவிழா நேற்று தொடங்கியது. நேற்று மதியம் 12 மணிக்கு படகுசவாரிக்கு செல்லும் பகுதியில் வரவேற்பு நிகழ்ச்சியாக கலைபண்பாட்டுத்துறை சார்பில் சேலம் மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவர்களின் நாதஸ்வரம், தவில் ஆகியவற்றுடன், சேலம் ஸ்ரீஅங்கம்மாள் கலைக்குழுவினரின் நையாண்டி மேளம், கரகாட்டம், கிராமிய கலைநிகழ்ச்சி, ஜலகண்டாபுரம் தனபால் குழுவினரின் கோல்கால் ஆட்டம், மொரப்பூர் பாரதி

கலைக்குழுவினரின் தப்பாட்டமும் நடந்தது. அதைத்தொடர்ந்து வாண வேடிக்கையுடன் மேளதாளம் முழங்க குதிரை அணிவகுப்புடன் ஊர்வலம் தொடங்கியது. இதையடுத்து ஏற்காடு அண்ணாபூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மலர் கண்காட்சியினை சேலம் மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இதில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சக்திவேல், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வராஜ், ஏற்காடு ஒன்றியக்குழு தலைவர் அண்ணாதுரை, ஏற்காடு ஊராட்சி மன்ற தலைவர் முரளி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு மலர் கண்காட்சியை பார்வையிட்டனர். ரோஜா மலர்களால் காட்டெருமை

அண்ணாபூங்காவில் அமைக்கப்பட்டிருந்த மலர் கண்காட்சி திடலில் தோட்டக்கலைத்துறை சார்பில் சுற்றுலா பயணிகளையும், குழந்தைகளையும் கவரும் வகையில் 15 ஆயிரம் ரோஜா மலர்களை கொண்டு 8 அடி உயரம், 12 அடி நீளம் கொண்ட காட்டெருமை அமைக்கப்பட்டிருந்தது. இதேபோல், அஸ்பராகஸ் இலை மற்றும் மலர்களை கொண்டு 10 அடி உயரம் கொண்ட யானை உருவம் வடிவமைக்கப்பட்டிருந்தன. இது காண்போர் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. இதில், ரோஜா, பால்சம், கிரசாந்திமம், பிலாக்ஸ், கோலியஸ், ஆண்டிரைனம், பிலாக்ஸ், ஆல்டோமா, டொரேனியா, பான்சி, சால்வியா, பெட்டூனியா, அலோசியம், டேலியா, கார்னேசன், லில்லி, ஆந்தூரியம், டெய்சி, சம்மங்கி, ஆஸ்டர், ஆரம்அல்லி, கோல்டன் ராட், மேரிகோல்டு, சில்வர்டாலர் அஜிரேட்டம் ஸ்வீட் வில்லியம் உள்பட 45 வகையான மலர்களால் சுமார் 2 லட்சம் மலர்களை கொண்டும், 5 ஆயிரம் பூந்தொட்டிகளிலும் இந்த மலர் கண்காட்சி அமைக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது. மலர்கண்காட்சியை கண்டுகளிக்க ஏற்காட்டிற்கு வந்திருந்த சுற்றுலா பயணிகள் பலர் மலர்களால் வடிவமைக்கப்பட்டிருந்த காட்டெருமை மற்றும் யானைகள் முன்பு நின்றுகொண்டு கேமராவில் புகைப்படம் எடுத்துக் கொண்டதை காண முடிந்தது. காய்கறி-பழ கண்காட்சி

மேலும் தோட்டக்கலைத்துறை சார்பில் பல்வகை காய்கறிகள் மற்றும்

பழங்களும் சுற்றுலா பயணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அண்ணாபூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் பாகற்காய்களால் வடிவமைக்கப்பட்ட முதலையும், தெர்மாகோல் மூலம் செய்யப்பட்ட அன்னப்பூரணி சிலை, சாக்லெட் மூலம் செய்யப்பட்ட மரம் மற்றும் வெண்ணெய்யால் செய்யப்பட்ட கிறிஸ்துமஸ் தாத்தா, மம்மி பிரமீடு ராணி, ராஜா, டால்பின் மீன்கள் போன்றவைகள் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது. இது குறித்து மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் நிருபர்களிடம் கூறியதாவது:- ஊட்டி, கொடைக்கானல் போன்ற பிரசித்தி பெற்ற சுற்றுலா தலங்களில் மட்டுமே 2-ம் பருவ மலர்கண்காட்சி நடத்தப்படும். அந்த வகையில் ‘ஏழைகளின் ஊட்டி’ என்று அழைக்கப்படும் ஏற்காட்டிலும் கடந்த 2 ஆண்டுகளாக 2-ம் பருவ மலர்கண்காட்சி சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. அதன்படி இப்போது மூன்றாவது ஆண்டாக ஏற்காட்டில் 2-ம் பருவ மலர்கண்காட்சி நடத்தப்படுகிறது. வழக்கமாக 2 நாட்கள் விழா நடக்கும். ஆனால் இந்தாண்டு கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டும், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை என பள்ளி விடுமுறை வருவதாலும் 3 நாட்கள் 2-ம் பருவ மலர்கண்காட்சி நடத்தப்படுகிறது. கரகாட்டம், தப்பாட்டம், படகுபோட்டி, குழந்தைகள் போட்டி, நாய் கண்காட்சி, பாட்டு கச்சேரி, கிராமிய ஆடல், பாடல் நிகழ்ச்சி, நகைச்சுவை பட்டிமன்றம் போன்ற பொழுது போக்கு அம்சங்களுடன் இந்த விழா நடத்தப்படுகிறது. சேலம் மாவட்டம் மட்டுமின்றி வெளியூர் சுற்றுலா பயணிகள் ஏற்காட்டிற்கு வந்திருந்து இந்த மலர் கண்காட்சியை கண்டுரசிக்கலாம். ஊட்டியை போல் ஏற்காட்டை சிறந்த சுற்றுலாதளமாக மாற்ற மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் மகரபூஷணம் கூறினார்.

மலிவுவிலையில்உணவு

ஏற்காடு இரண்டாம் மலர்கண்காட்சி மற்றும் கலைவிழாவை சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் சிறப்பு பஸ் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளுக்கு பொன்னி கூட்டுறவு அங்காடி மூலம் மலிவு விலையில் அதாவது ரூ.15-க்கு கலவை சாதம்

(தக்காளி, லெமன், புளி சாதம்) வழங்கப்பட்டது. செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியும் வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, அனைத்துத்துறை சார்பில் ஸ்டால்களும் அமைக்கப்பட்டுள்ளது.

## 166 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க அனுமதி கலெக்டர் மதிவாணன் தகவல்



திருவாரூர் மாவட்டத்தில் 166 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக, கலெக்டர் மதிவாணன் கூறினார்.
குறைதீர்க்கும்கூட்டம்
திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:- தம்புசாமி: 2014-2015-ம் ஆண்டு கரும்பு அறவை பருவத்துக்கு பரிந்துரை விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 4 ஆயிரம் என அறிவிக்க வேண்டும். 2012-ம் ஆண்டு சொட்டு நீர்ப்பாசனத்துக்கு கரும்பு விவசாயிகள் பெற்ற கடனை ஆலை நிர்வாகம் கட்டத்தவறியதால் மக்கள் நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் வந்துள்ளது. இது விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது. மாவட்ட நிர்வாகம் நோட்டீஸ் அளித்த வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி கரும்பு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். பாண்டியன்: சம்பா, தாளடியில் புகையான் பாதித்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். முன்கூட்டியே தூர்வார வேண்டும். ராஜதுரை: வருகிற ஆண்டில் ஆறு, வாய்க்கால்களை முன்கூட்டியே தூர்வார வேண்டும். விவசாயிகளின் கோரிக்கைகளை, மாவட்ட அளவிலேயே கிடப்பில் போடாமல், மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். பாலசந்திரன்: விவசாய இடுபொருட்கள், எந்திரங்களை கொண்டு செல்ல

வசதியாக வயல்வழி சாலைகளை சீரமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

மாசிலாமணி: காவிரியில் புதிய அணையை கட்ட கர்நாடகத்துக்கு மத்திய அரசு அனுமதி அளிக்க கூடாது என்று பிரதமர் மோடியிடம் மனு அளித்துள்ளோம். நல்ல தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம். மத்திய, மாநில அரசுகள் நெல் குவிண்டாலுக்கு ரூ. 200-ஐ ஊக்க தொகையாக வழங்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினர். நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் கூட்ட முடிவில் கலெக்டர் மதிவாணன் கூறியதாவது:- மாவட்டத்தில் சில இடங்களில் சம்பா, தாளடி பயிரில் பரவிய புகையான் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு வேளாண்மை கருவிகள் விவசாயிகளுக்கு குறைவான வாடகையில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாவட்டத்தில் தற்போது 166 நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடத்தில் நெல்கொள்முதல் நிலையம் அமைக்கப்படும். இவ்வாறு கலெக்டர் கூறினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி மணிமாறன், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு கலெக்டர், அதிகாரிகள், விவசாயிகள் 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>மூலிகைச் செடியால் விரட்டலாம் கொசுவை!</u>**



தமிழ்நாட்டில் கொசுக்களுக்குச் சீசனே கிடையாது. மழைக்காலத்தைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. கொசு கடித்தால் மலேரியா, டெங்கு வந்துவிடுமே என்று கொசுவர்த்தியை வைத்துவிட்டுத் தூங்குபவர்களில் சிலருக்குக் காலையில் மூக்கு ஒழுகி, தொண்டை கட்டிக்கொண்டு, கண் எரிச்சலும்கூட வந்துவிடுகிறது. "ஒரு கொசுவர்த்தியை எரிக்கும்போது வெளிவரும் நுண்துகள் 75 முதல் 137 சிகரெட்களைப் புகைக்கும்போது வருகிற நுண்துகளுக்குச் சமம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். காற்றில் கலந்துள்ள எல்லா நுண்துகளுமே சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிப்பவை தான். அதிலும் கொசு விரட்டியில் இருந்துவரும் நுண்துகள் மோசமானது. இது 2.5 மைக்ரோ மீட்டர் விட்டம் மட்டுமே கொண்டது. அதனால் எளிதாக நம் நுரையீரலுக்குச் சென்று பல நோய்களை ஏற்படுத்துகிறது" என்று எச்சரிக்கிறார் மதுரை அமெரிக்கன் கல்லூரி உதவிப் பேராசிரியர் எம். ராஜேஷ்.

## வேறு என்ன வழி?

சரி, அப்படியானால் தூக்கத்தைத் தொந்தரவு செய்யும் கொசுக்களை எப்படி விரட்டுவது? இயற்கை வழியிலேயே கொசுவை விரட்டலாம் என்கிறார். கொசு விரட்டும் மேட், திரவம், ஸ்பிரே போன்றவையும் உடல்நலத்துக்குக் கேடு விளைவிப்பவைதான். இவற்றுக்குப் பதிலாகக் கொசுவுக்குப் பிடிக்காத நறுமணம் பரப்பும் செடிகளை வீட்டில் வளர்ப்பதன் மூலம் இயற்கை முறையில் கொசுக்களை விரட்டலாம்.அவர் அறிமுகப்படுத்திய செடிகள்:

## இயற்கை கொசுவிரட்டிகள்

**சாமந்திப்பூ (Calendula Officinalis):** இச்செடியில் இருந்துவரும் தனித்தன்மை கொண்ட வாசனையைப் பூச்சிகளும், உயிரினங் களும் விரும்புவதில்லை. இச்செடிகளைக் கடந்து வீட்டுக்குள் செல்லக் கொசுக்கள் தயங்குகின்றன. இச்செடியை நிழலில் வைத்தால் வளர்ச்சி தாமதமடையும் என்பதால், வெயிலில் வளர்ப்பது நல்லது. அசுவினி உள்ளிட்ட பூச்சிகளையும் அழிக்கும் தன்மை கொண்டது என்பதால், விவசாயத் தோட்டத்திலும் இதை வளர்க்கலாம்.



**சிட்ரோநெல்லா புல் (Citronella):** இலைகளைக் கசக்கினால் எலுமிச்சை மணம் தூக்கலாக வீசுவதுதான், இந்தப் புல்லின் தனிச்சிறப்பு. இதில் இருந்து எடுக்கப்படும் சிட்ரோ நெல்லா எண்ணெய் வாசனைப் பொருளாக வும், மூலிகைத் திரவமாகவும் பயன்படுகிறது. இந்த எண்ணெயை மெழுகுவர்த்தி, விளக்குகளில் ஊற்றி எரித்தோ, சருமத்தில் தேய்த்துக்கொண்டோ கொசுக்களில் இருந்து காத்துக்கொள்ளலாம்.



**ஹார்ஸ் மின்ட் (Horse mint):** ஒரு வகை புதினா செடியான இதன் மணம் சிட்ரோநல்லா புல்லைப் போலவே இருக்கும். வெப்பமான இடங்களிலும், மணற்பாங்கான பகுதி யிலும்கூட நன்றாக வளரும். பல்லாண்டுத் தாவரம் என்பதால், ஒரு முறை நட்டுவிட்டால் நான்கைந்து ஆண்டுகளுக்கு இது கொசுவிரட்டியாகச் செயல்படும்.



**கேட்னிப் (Catnip):** சமீபத்தில் கண்டறியப் பட்ட, புதினா குடும்பத்தைச் சேர்ந்த கொசுவிரட்டி இது. டீட் என்ற ரசாயனப் பூச்சிக் கொல்லியைவிட, இது பல மடங்கு சிறப்பாகச் செயல் படக்கூடியது. ஒரேயொரு செடி இருந்தால்கூட வீட்டுப் பக்கமே கொசு வராது. இதன் இலைச் சாற்றை உடலில் தேய்த்துக் கொள்ளலாம். வெயில் மற்றும் லேசான நிழலில் நன்கு வளரும். இதன் வாசனை பூனைகளுக்குப் பிடிக்கும் என்பதுதான், இதன் பெயருக்குக் காரணம்.



**எலுமிச்சை பாம் (Lemon Balm):** இதுவும் புதினா வகையைச் சேர்ந்ததுதான். ஆனால், எலுமிச்சை வாசனை வரும். வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படும் இந்தச் செடியை வீட்டில் வளர்த்தால், வீடும் நறுமணமாக இருக்கும் கொசுக்களுக்கும் குட்பை சொல்லலாம்.

**அப்பக்கொடி (Ageratum):** இந்தச் செடியில் பூக்கிற வெளிர் ஊதா மற்றும் வெண்ணிறப் பூக்களில் கௌமாரின் என்ற வாசனைப் பொருள் உருவாகிறது. இந்தக் கடுமையான வாசனை கொசுக்களை விரட்டியடிக் கிறது. வணிக ரீதியாகக் கடைகளில் விற்கப்படும் கொசு விரட்டிகள் தயாரிப்பிலும் இது பயன்படுகிறது. ஆனால், மற்ற தாவரங்களைப் போல இதன் சாற்றை உடம்பில் தடவிக் கொள்ளக் கூடாது, சருமத்துக்குக் கேடு விளைவிக்கும்.



**லாவண்டர் (Lavandula Angustifolia):** கொசுக்களை விரட்டும் அற்புதச் செடியான இதற்கு, அதிகத் தண்ணீர் தேவையில்லை. கவனிப்பும் அதிகம் தேவையில்லை என்பதால், வீட்டில் எளிதாக வளர்க்கலாம். லாவண்டர் எண்ணெயைத் தண்ணீரில் கலந்து, ரசாயனம் இல்லாத கொசுவிரட்டி லோஷனைத் தயாரிக்கலாம்.



**ரோஸ்மேரி (Rosmarinus Officinalis):** ரோஸ்மேரி செடியை வீட்டில் வளர்த்தால், கொசுக்கள் மட்டுமின்றி மற்ற பூச்சிகளும் வீட்டை அண்டாது.

இச்செடி அதிகக் குளிரைத் தாங்காது என்பதால் கார்த்திகை, மார்கழி மாதங்களில் வீட்டுக்குள் வைத்து வளர்க்கலாம்.



இவற்றைத் தவிர நமக்கு நன்கு அறிமுகமான வேப்பமரம், துளசி, கிராம்புச் செடி போன்றவற்றை யும் வீட்டில் வளர்த்து கொசுக்களை விரட்டலாம்.

## உழவே தலை - தேசிய விவசாயிகள் நாள் (டிசம்பர் 23 )



பூவுலகில் உயிர்களுக்கு இடையேயான உயிர்ச் சங்கிலியும், உணவுச் சங்கிலியும் அறுந்துவிடாமல், அனைத்துயிர்களும் இணக்கமாக வாழ்ந்திட வேண்டும். அத்தகைய வாழ்க்கைச் சூழலே உலகம் நிலைத்திருக்க வழி என்கிறார்கள் சூழலியலாளர்கள். இதற்கு அச்சாணியாக இருந்து, காலங்காலமாகச் சக மனிதர்களுக்கு உணவு படைத்துவருபவர்கள் விவசாயிகள்.

**தீதும் நன்றும்**

இன்றைக்கு உணவும் பெருமளவு நஞ்சாகிவிட்டது, உணவு உற்பத்தி முறை சீர்கெட்டதும், சூழலியல் மாசுபட்டதுமே இதற்கு முக்கியக் காரணம். அதிக உணவு உற்பத்தி, பசுமைப் புரட்சி என்ற பெயரில் நிகழ்த்தப்பட்டவை உணவு நஞ்சாவதற்கு முக்கியக் காரணம். எந்த மக்கள்தொகையைக் காரணம் காட்டிப் பசுமைப் புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதோ, அந்தக் காரணம் இன்று வரைக்கும் நிறைவேற்றப்படவில்லையே! வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள், தினசரி மூன்று வேளை முழு உணவின்றி இருப்பவர்கள் என்று

வகைப்படுத்தியிருக்கிறோமே தவிர, பசியைப் போக்கிடவில்லை. மண்ணும், மணி நீரும் மாசுபட்டுச் சுற்றுச்சூழலும் மனிதர்களும் புதுப்புது நோய் கண்டவர்களாகிவிட்டதுதான் மிச்சம். குறிப்பிட்ட ஓர் இயற்கை வாழிடத்தில் வாழும் உயிர்களுக்குத் தேவையான உணவு, அப்பகுதியிலேயே கிடைக்கும். அந்த உணவே “குறையினும் மிகினும் நோய் செய்யும் அதுவே மருந்தாகவும் செய்யும்''. ஒவ்வொரு வட்டாரமும் வெவ்வேறு மண் தன்மையையும் நீரின் தனித்த குணத்தையும் பெற்றிருப்பதே இதற்குக் காரணம். அதனால், அவ்விடத்தில் வாழும் மனிதர்களும் உயிரினங்களும் அப்பகுதியில் விளையும் உணவைச் சார்ந்திருப்பதே சிறந்தது.

**நம் உணவே நல்லுணவு**

இன்றைக்குக் காஷ்மீர் ஆப்பிளும், ஆஸ்திரேலிய ஓட்சும் நம் கையருகே வந்துவிட்டன. இது நமக்கு மட்டுமல்லாமல், நம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் நன்மை செய்வதில்லை. ஓரிடத்தில் விளையும் உணவுப் பயிர் அப்பகுதி மக்களுக்குக் கிடைக்கும்போது, மண்ணின் இயல்புக்கு ஏற்ப இருப்பதுடன், ஊட்டமும் குறையாமல் கிடைக்கும். விவசாயிகளுக்கு வாழ்க்கை கிடைக்கும். இயற்கை வேளாண்மை என்பது ஏதோ, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட முறையல்ல. காலம்காலமாக நமது மூதாதையர்கள் அணு அணுவாகச் செதுக்கிய உழவுக் கலைதான். இன்றைக்கு இயற்கை விவசாயத்துக்கான மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாக மீட்டெடுக்கப்பட்டு வருகிறது. இயற்கை விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் பசுமை அங்காடிகளும் அதிகரித்துவருகின்றன. இயற்கை விவசாயத்தை வளர்த்தெடுக்க, நாமும் அதைச் செய்ய வேண்டுமென்பதில்லை. அதன் அவசியத்தையும் சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அதன் வளர்ச்சிக்குப் பங்களித்தால் போதும். அந்த வகையில் இயற்கை விவசாயத்தை மேற்கொள்பவர்கள், பசுமை அங்காடிகளுடன் நுகர்வோரும் கைகோக்க வேண்டும். இப்படி முத்தரப்பும் இணைந்து சுதந்திரமான, தற்சார்புடைய விவசாயத்தை நிலைபெறச் செய்வதன் மூலம் சூழலியலைச் சீர்கெடுக்காமல்

உணவுத் தன்னிறைவைப் பெறலாம். அதுவே இன்றைய அவசர, அவசியத் தேவை

<u>**கொத்தமல்லி சாகுபடி அமோகம் : ஐ.டி.யைத் துறந்த விவசாயி சாதனை**</u>



விவசாயத்தில் குடும்பம் தத்தளித்தபோது, ஐ.டி. வேலையைத் தைரியமாகத் துறந்துவிட்டு விவசாயத்தில் இறங்கிய இன்ஜினீயரிங் பட்டதாரி கொத்தமல்லி சாகுபடியில் சாதனை படைத்திருக்கிறார். தேனி மாவட்டம் கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம், கே.கே. பட்டி, நாராயணதேவன்பட்டி ஆகிய பகுதிகளில் திராட்சை, தென்னை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் நோய் தாக்குதல், விலை குறைவு போன்ற பல பிரச்சினைகளால் விவசாயிகள் மாற்று விவசாயத்தில் இறங்கிவிட்டனர். இதற்கிடையில், கம்பத்தைச் சேர்ந்த பட்டதாரியான கே.பி.ராஜேஸ்வரன் கம்பம் அருகே கே.கே.பட்டியில் கொத்தமல்லி சாகுபடியில் சாதனை படைத்து மற்ற விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

**வேதனையில் விளைந்தது**

“பி.இ. முடித்துவிட்டுச் சென்னையில் தனியார் ஐ.டி. நிறுவனத்தில் கைநிறையச் சம்பளத்துடன் வேலை செய்துவந்தேன். எங்கள் குடும்பம் பல தலைமுறையாகத் தென்னை விவசாயம் செய்துவந்தனர். ஆனால், தென்னையை நோய் தாக்கி விளைச்சல் குறைந்தது. தென்னை மரங்கள் கருகியதால் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இதனால் மனவேதனை அடைந்து ஐ.டி. வேலையை உதறிவிட்டுச் சொந்த ஊருக்கு வந்துவிட்டேன். கடந்த 5 ஆண்டுகளாக விவசாயத்தில் ஈடுபட்டுவருகிறேன்” என்கிறார் ராஜேஸ்வரன். தன்னுடைய நண்பர்கள், தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஆலோசனையின்படி கடந்த ஆண்டு 15 ஏக்கரில் முதன்முறையாகக் கொத்தமல்லி சாகுபடி செய்துள்ளார். ஒரு ஏக்கரில் கொத்தமல்லி சாகுபடி செய்ய விதை, நடவு கூலி, களைக்கொல்லி

தெளித்தல் என ரூ.20 ஆயிரம் முதல் ரூ. 25 ஆயிரம்வரை செலவு ஏற்பட்டது. இயற்கை உரம் வைத்துச் சொட்டு நீர் பாசன முறையைக் கையாண்டபோது, 45 நாட்களில்அறுவடைக்குத்தயாராகிவிடுகிறது.

**நேரடி கொள்முதல்**

ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் கிலோவரை கொத்தமல்லி கிடைத்தது. மார்க்கெட்டில் தற்போது சராசரியாக ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை விலை போகிறது. செலவு போக ஏக்கருக்கு ரூ.70 ஆயிரம் லாபம் கிடைத்தது. சென்னை, மதுரை, கேரளம் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் இங்கு வந்து மொத்தமாகக் கொத்தமல்லி வாங்கிச் செல்கின்றனர். கொத்தமல்லி சாகுபடியில் நோய் தாக்குதல் குறைவு. சந்தைப்படுத்துவது மிகவும் எளிது. கொத்தமல்லிக்கான தேவை எப்போதும் இருப்பதால் ஆண்டு முழுவதும் இதைச் சாகுபடி செய்யலாம். கோடை காலத்தில் சாகுபடி செய்தால் செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும். செம்மண், வண்டல் நிலங்கள் கொத்தமல்லி சாகுபடிக்கு ஏற்றவை. செம்மண் பூமியில் நன்கு செழித்து வளரும். விதை வாங்கும்போது தரமான விதைகளைத் தேர்ந்தெடுப்பது அவசியம். “தென்னை விவசாயத்தில் நஷ்டம் அடைந்த எனக்குக் கொத்தமல்லி சாகுபடிதான் இப்போது கைகொடுக்கிறது” என்கிறார் ராஜேஸ்வரன்.